


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், உலக மனநாள் தின நிகழ்ச்சி, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்று (19.10.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 735/2016 நாள்: 19.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், உலக மனநாள் தினத்தை முன்னிட்டு, நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியர்களுக்கு நினைவு பரிசுகளை இன்று (19.10.2016) வழங்கினார்.**

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 10-ம் தேதி உலக மனநாள் தினமாக அனுசரிக்கப்பட்டு, மனநோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை ஊக்கப்படுத்தும்விதமாக, அவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, நினைவு பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், உலக மனநாள் தின நிகழ்ச்சி, மனநல பிரிவு சார்பாக, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள தேர்வு கூடத்தில் இன்று (19.10.2016) நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தலைமையேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு மனிதனுக்கும் பல்வேறு நிகழ்வுகளால் மனஅழுத்தம் ஏற்படுகிறது. இவற்றை நீங்களே தெரிந்துகொண்டு, ஆரம்பத்திலேயே சரி செய்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் ஒரு கட்டத்தில் மனஅழுத்தம் ஏற்பட்டு, மனநோயினால் பாதிக்கப்படுவீர்கள். அதுமட்டுமல்லாமல், உடல்நல குறைவு நிச்சயமாக ஏற்படும். இன்றைய காலத்தில் இளைஞர்கள், புதிதாக திருமணம் முடிந்த தம்பதிகள் அதிகளவில் மனநோயினால் பாதிக்கப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் நினைப்பது அவர்களுக்கு கிடைப்பதில்லை. இது ஒரு கட்டத்தில் மனநோய் ஏற்படுவது மட்டுமல்லாமல், தற்கொலை போன்ற சம்பவம் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

எனவே மனதினால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களை அணுகி, அவர்கள் வழங்கும் அறிவுரைகளை பின்பற்றி, தங்களது குறைகளை நிவர்த்தி செய்துக்கொள்ள வேண்டும். மேலும் தமிழக அரசால் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தகுதியான நபர்கள் இவற்றை அனைத்தும் நீங்கள் பெற்று பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து உலக மனநாள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற மனவளர்ச்சி குன்றிய பள்ளியில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கும், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பயிலும் மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே நடைபெற்ற கட்டுரைப்போட்டி மற்றும் ஓவியபோட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் நினைவு பரிசுகளை வழங்கினார்.

முன்னதாக மனவளர்ச்சி குன்றிய பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சியினை பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. ஜி. ரவீந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ப.காந்தி, மனநல மருத்துவர் மரு. ஒய். அருள்பிரகாஷ், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. கே.பி.பிரம்மநாயகம், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. எம். இராதாகிருஷ்ணன், உறைவிட மருத்துவர் மரு. மேரிவிஜயா, மரு. அருள்மேரி லுபிட், மரு. ஜெஸ்டின்பால் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.